திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்று சொன்ன, நான் வணங்குகின்ற தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, அந்த வேலைகள் எப்பொழுது தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிறுவந்தாடு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 22 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் வரப்பெற்றிருக்கிறது. வருகிற நிதியாண்டில் அதுபற்றி ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 199, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

199--

தமிழ்நாட்டில் சீர்மரபினர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டுதல்

***20234-டாக்டர் பெ. வீரபாண்டியன்:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மறறும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் வாழ்க்கைத் தரத்தில் பின்தங்கியிருக்கும் சீர்மரபினர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஆகிய மாவட்டங்களில் சீர்மரபினர்களான செங்கையம் குடி குறவர் கொம்மார் ஜோஹிஸ், டாபி குறவர், ஒட்டர் பொன்னை குறவர் உப்பு குறவர், சர்க்கரை தலைக்குறவர், வண்ணார் வலையர் ஆகிய சீர்மரபினர் அதிகமாக இருக்கிறார்கள்.

1994 ஏப்ரல் 5]

அமைச்சரவர்கள் நரிக் குறவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்து இலவசமாக அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மட்டுமல்ல, அவர்கள் இங்குமங்கும் சுற்றித் திரியும் நிலை போய் இப்பொழுது ஒரேயிடத்தில் நிலையாக இருந்து அவர்கள் ஊசி மணி இதுபோன்ற மணிகளை விற்பனை செய்து பிழைக்கும் நிலையில் இருக்கிறது. செங்கம் தொகுதியில் ஒட்டர் அதிகம் உள்ளனர். அதைப்போல, இம்மக்களுக்கும் இலவசமாக வீடுகள் கட்டித்தர நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிதிநிலைமை நன்கு முன்னேறிய பின்பு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இத்திட்டத்தை அமல்படுத்துவதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலத் திட்டக் குழு நிதி அளித்த பின் இக்கருத்துருவை மீண்டும் அனுப்பும்படி பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நல இயக்குநர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய காவல் தெய்வமாக இருக்கிற நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், நரிக்குறவர்களுக்கு, *150* வீடுகள், ஒவ்வொரு வீடும் தரமான வீடாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில், ரூ. *20,600* செலவில், மொத்தம் ரூ. *30,90,000* ஒதுக்கி உத்தரவிட்டுள்ளார்கள். தற்போது, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலுள்ள, பெய்யூர், பிள்ளைவாயில் கிராமங்களிலுள்ள நரிக்குறவர்களுக்கு கட்டித் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், அவருடைய தொகுதியிலே உள்ள நரிக்குறவர்களுக்கு வீடுகள் வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். அந்த நரிக்குறவர்கள், நிலையாக அந்த இடத்திலேயே தங்கியிருப்பார்கள் என்றால், நரிக்குறவர்களுக்குத் தேவையான வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *11-10*

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தியாவிலேயே எங்கும் இல்லாமல், தமிழகத்தில் மட்டும்தான், புரட்சித்தலைவியினுடைய நல்லாட்சியில், "அனைவருக்கும் குடியிருப்பு இல்லம்" என்ற ஒரு திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி நடத்த திட்டமிட்டிருக்கிறார்கள். கிராமிய வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக, மூன்றில் ஒரு பங்கு மானியமாக வீடுகள் கட்டித் தரும் திட்டமிருக்கிறது; அதுபோல, சீர்மரபினருக்கும் தற்போது மானியத்திலாவது வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா எனக் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 200, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

200--

தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு இறால் வளர்க்க பயிற்சி அளித்தல்.

*24816-திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு இறால் வளர்க்க பயிற்சி அளித்திட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு இறால் வளர்க்க பயிற்சி ஏதும் அரசால் அளிக்கப்படுவதில்லை.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மீன் வளர்ப்போருக்குப் பயிற்சி அளித்த காரணத்தினால், இன்று அந்த மாவட்டத்தின் மத்தியில் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டிருக்கிறது. அதற்கொப்ப, அந்தப் பகுதியிலே நிறைய ஏரிகள் இருக்கின்ற காரணத்தினால் மேலும் கிராமப் பொருளாதாரம் மேம்படும் என்பதால், அங்கு இறால் வளர்க்கின்ற பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலுக்கு அருகாமையில்தான் இறால் வளர்க்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. மாறாக, உள்நாட்டு நீர்நிலைகளில், உள்நாட்டு இறாலை ஊக்குவிப்பதற்காக, நம்முடைய முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இறாலின் தாய்க் குஞ்சுகள் மிகவும் எளிதாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே, Hatchery-ஐ நிறுவுவதற்கு 2½ இலட்சம் ரூபாய் அளவிற்கு, தனியார் அதனை நடத்த முன்வந்தால், அத்தொகையை மானியமாக